மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) மற்றும் (ஆ) திண்டிவனம் நகரத்தில் பிற்பட்டோர் வகுப்புத் துறையால் நடத்தப்படும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி தற்போது இல்லை. எனவே, கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திருக்காட்டுப்பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கான விடுதி ஏற்படுத்தும் திட்டம்.

314—*வினா எண் 19398—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியில் பிற்படுத் தப்பட்ட மாணவிகளுக்கு விடுதி (Hostel) ஏற்படுத்த அரசிடம் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

செண்பகவல்லி அணையைப் பழுதுபார்க்கும் திட்டம்.

259—(*வினா எண். 18061)—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்பு மிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் வாசுதேவநல்லூருக்கு மேற்கே உடைந்துள்ள செண்பகவல்லி அணையைக் கட்டுவதற்கு அர சிடம் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) செண்பகவல்லி அணை மற்றும் கன்யாமதுகு கால்வாயைப் பழுது பார்க்கும் பணிக்காக கேரள அரசு அனுப்பியுள்ள திருத்திய மதிப் பீட்டுக்கு தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகளை உடனே மேற்கொள்ளுமாறு கேரள அரசு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

1984 மார்ச் 14]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த உடைந்துபோன செண்பகவல்லி அணையினுடைய தண்ணீர் வீணாக கேரளாவை நோக்கி மேற்கே போய்க்கொண்டிருக்கிறது. இதிலே 1978-இல் ரூ. 5.55 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பிறகு திருத்திய மதிப்பீடு ரூ. 7,52,117-க்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தற்போது மீண்டும் ஒரு திருத்திய மதிப்பீடு ரூ. 10.29,233-க்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆக, காலதாமதத்தின் காரணமாகத்தான் இப்படி மதிப்பீடுகள் திருத்தப்பட வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே ஒரு ஜி. ஓ. இருக்கிறது. இந்த விலையேற்றத்தின் காரணமாக மதிப்பீடுகள் திருத்தப்படுகிறபோது, அதை அரசினுடைய அனுமதி இல்லாமலேயே துறையைச் சார்ந்தவர்களே, செலவு செய்து கொள்ளலாம் என்ற ஒரு ஸ்டேண்டிங் ஜி. ஓ. இருந்தும்கூட, காலதாமதமாகிக் கொண்டே இருக்கின்ற காரணத்தால், இப்படிப்பட்ட குறைபாட்டை அரசு உடனடியாகத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமா என்பதையும், இந்தப் பணியை எவ்வளவு காலத்திற்குள் மேற்கொள்ள முடியும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இந்தப் பணியைப் பொறுத்தமட்டில், பணியை மேற்கொள்ள வேண்டியது கேரள அரசு அலுவலர்கள் என்பதையும், பணிக்கானச் செலவை ஏற்றுக்கொள்வது தமிழக அரசு என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையில் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்கின்ற திட்ட மதிப்பீடுகள் அவ்வப்போது கேரள அரசு அலுவலர்களால் திருத்தப்படுவதன் காரணமாக தமிழக அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. அந்த முறையில் தான் இந்த மதிப்பீடுகள் இரண்டுமுறை திருத்தப்பட்டு, மூன்றாவது முறையாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், ஏறத்தாழ ரூ. 10 இலட்சத்திற்கும் மேற்பட்டு வந்திருக்கிறது. அந்தத் தொகைக்கான அனுமதியை வழங்குவதற்காக அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. இது இரண்டு மாநிலங்களைப் பொறுத்த ஒரு விஷயமாக இருப்பதால், தமிழக அரசு தன்னிச்சையாக ஒரு முடிவை எடுக்க முடியாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : இந்தப் பணிக்காக தமிழக அரசுதான் பணத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் தான் காலதாமதம். இதை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செய்யலாம். மழைக்காலம் முடிந்தவுடனேயே தான் இத்தகைய பணிகளைத் துவங்குவதற்கு ஒரு சரியான சந்தர்ப்பமாகும். ஆகையால் உடனடியாக இதற்காக தனியாக ஒரு செயற் பொறியாளரை பணிகளை மேற்கொள்ளுவதற்காக ஏற்பாடு செய்ய முடியுமா ? அதைக் காலாகாலத்தில் செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலும், ஏற்கெனவே, திருநெல்வேலி செயற்பொறியாளர் அவர்கள் கேரளத்திலே உள்ள செயற் பொறியாளருடன் தொடர்பு கொண்டு இந்தப் பணி விஷயமாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள நம்முடைய தலைமை பொறியாளர் (பாசனம்) அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அந்த வகையில் இயன்ற அளவிற்கு இந்தப் பணிகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அந்தப் பணிக்கான தொகையை தமிழக அரசு ஏற்றுக்கொள்கிறது என்றும் அந்தப் பணியைச் செய்பவர்கள் கேரளத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், அலுவலர்களும் என்று சொன்னார்கள். ஆகவே, அந்தப் பணி முறையாக அந்த அதிகாரிகளால் செய்யப்படுகிறதா? இல்லையா? என்பதை கண்காணிக்க தமிழக அரசினுடைய அலுவலர்கள் அல்லது பொறியாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்களா? இல்லை என்றால், அப்படி ஒரு குழுவை அமைத்து, ஆவன செய்ய தமிழக அரசு முன் வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, பணி நடைபெற வேண்டிய இடம் கேரள எல்லையில் இருக்கிறது. ஆனால், பயன் கிடைப்பதோ, தமிழகத்தைச் சேர்ந்த பகுதிகள். அந்த முறையில் கேரள அரசின் அலுவலர்களை வைத்துத்தான் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. கேரளாவிலும் அரசு அங்கே நடந்துகொண்டிருக்கிறது—நமக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ, அதே அளவிற்கு பொறுப்பு கேரள அரசுக்கு இருக்கின்ற காரணத்தால், கேரள அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலர்களை நம்பித்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் கருத்து அவ்வளவு சரியானதாக இல்லை என்று அரசு கருதுகிறது.

சித்தார் அணை கட்டும் திட்டம்.

260—(*வினா 18478)—திரு. பி. ஜி நாராயணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—